



கழகத் தலைவர்–முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் அறிவிப்புக்கிணங்க மதுரை வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் தொகுதி பாக பொறுப்பாளர்கள் மற்றும் கழக இளைஞரணி செயலாளர் – அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாள் விழா குறித்த ஆலோசனைக் கூட்டத்தில் மதுரை வடக்கு மாவட்டச் செயலாளர் வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி பேசிய போது எடுத்த படம் உடன் தொகுதி பொறுப்பாளர்கள் பெருநாழி போஸ், சு.பா.தா. தங்கம், ஆனந்த் கழக நிர்வாகிகள் ஆ. வெங்கடேசன் எம் எல் ஏ, சோமசுந்தர பாண்டியன், நேரு பாண்டியன், ஆசைக்கண்ணன், வடிவேல் முருகன் மற்றும் பாக முகவர்கள், கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

### மதுரை மாநகர் மாவட்டக் கழகம் சார்பில்

# முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழா பொதுக்கூட்டம்!

## கோ.தளபதி-நாஞ்சில் சம்பத் - அமைச்சர் பி.டி.ஆர்.பழனிவேல் தியாகராஜன் -பொன்.முத்துராமலிங்கம் சிறப்புரை!

மதுரை, நவ. 25-

மதுரை மாநகர் மாவட்டம் காமராஜபுரம் பகுதி கழகம் சார்பில் முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழா - மற்றும் அமைச்சர் - கழக இளைஞரணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் பிறந்த நாள் விழா பொதுக் கூட்டம் இன்று (25.11.2023 -சனிக்கிழமை) மாலை 6.00 மணியளவில் தினமணி தியேட்டர் அருகில் நடைபெறுகிறது.

இக்கூட்டத்திற்கு பகுதிக் கழகப் பொறுப்பாளர் முத்து தலைமையேற்க, மா.முகேஷ் சர்மா வரவேற்புரையில் அமைச்சர் பி.டி. ஆர்.பழனிவேல் தியாக ராஜன், நாஞ்சில் சம்பத், மாநகர் மாவட்டச் செயலாளர் கோ.தளபதி எம்.எல்.ஏ. ஆகியோர் சிறப்புரையாற்றுகின்றனர்.

மேலும் இக்கூட்டத்தில் முன்னாள் அமைச்சர் பொன்.முத்துராமலிங்கம், வ.வேலுச்சாமி, பெ.குழந்தைவேலு, எம்.ஜெயராம், கே.தனசெல்வம், மதுரை மேயர், வ.இந்திராணி ஆகியோர் உரையாற்றுகின்றனர்.

இக்கூட்டத்தில் ஆர்.முருகவேல், பி.விஜயலட்சுமி பாண்டியன், பி.சுப்பிரமணி, ஏ.கே.உஸ்மான் அலி, எம்.ராஜேந்திரன், எம். சடையாண்டி, என்.ஆங்கன், ஆர்.செல்வராஜ், சுரேஷ் பாலாஜி, பி.மலைச்சாமி, ஆர்.பி.முத்துப்பாண்டி, எஸ்.கணேசமுருகன், டி. கார்மேகம், எம்.கோபிநாத், எம்.ராஜ்குமார், சி.திருப்பதி, ஆர்.முருகன், பி.முருகேசன், டி.கணேசன், மற்றும் மா.ஒச்சுபாலு, ஜே.மூவேந்திரன், திருமதி அன்னம்மாள், எஸ்.ராஜசேகரன், அக்ரி கே.பி.டி.கணேசன், ஆர்.கணேசன், பி.பாக்கியநாதன், சி.வீரகணேசன், ஆர்.சௌந்தரராஜன், மற்றும் அன்புமதி உட்பட அனைத்து அணிகளின் கழகத் தோழர்கள் கலந்து கொள்கின்றனர்.

ஆர்.சசிக்குமார், என். கணேசன், கே.தினேஷ் குமார், பி.டி.கணபதி, எம். எம்.முத்துப்பாண்டி, ஆர். ராமு ஆகியோர் நன்றியுரை கூறுகின்றனர்.

---

### தேனி வடக்கு மாவட்டக் கழகத்தினர்

# வாக்காளர் சேர்த்தல், திருத்தம் நீக்கல் சிறப்பு முகாமில் பங்கேற்பீர்!

## மாவட்டச் செயலாளர் தங்கதமிழ்செல்வன் வேண்டுகோள்!

தேனி, நவ.25-

தேனி வடக்கு மாவட்டச் செயலாளர் தங்கதமிழ் செல்வன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

வருகின்ற 25.11.2023 மற்றும் 26.11.2023 நாட்களில்

சிறப்பு வாக்களர் சேர்த்தல்,திருத்தம்,நீக்கல் முகாமில் தேனி வடக்கு மாவட்டத்திற்குட்பட்ட போடிநாயக்கனூர் மற்றும் பெரியகுளம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட வாக்குச்சாவடி பொறுப்



பாளர்கள்,பூத் கமிட்டி உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர், கிளைக் கழக, வார்டு செயலாளர்கள், நிர்வாகிகள், சார்பு அணி நிர்வாகிகள், அனைவரும் கலந்து கொண்டு வாக்களர் சேர்த்தல்,திருத்தம்,நீக்கல் பணியினை மேற்கொள்ளுமாறு கேட்டுகொள்கிறேன்.

இவ்வாறு அவர் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

---

### சி.வி.எம்.பி.எழிலரசன் தலைமை! தி.மு.க. மாணவர் அணி சார்பில்-குற்றாலத்தில்

# மாவட்ட அமைப்பாளர் - துணை அமைப்பாளர்களுக்கான மூன்று நாள் கருத்தியல் பயிலரங்கம் !

## பேராசிரியர் சுப.வீரபாண்டியன் - கம்பம் செல்வேந்திரன் - த.சோழராஜன் சிறப்புரை!

தென்காசி, நவ.25-

தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் ஆகியோரின் சிந்தனை, சொல், செயல் வடிவமாய் விளங்கும் கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலின் படி, கழக இளைஞர் அணிச் செயலாளர் - அமைச்சர் இளந்தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் வழி காட்டுதலோடு, தி.மு.க. மாணவர் அணியின் மாவட்ட அமைப்பாளர் - துணை அமைப்பாளர்களுக்கு மூன்று நாள் கருத்தியல் பயிலரங்கம், தென்காசி மாவட்டம், குற்றாலம், ராயல் கிரீன் ரிசார்டின் வளாகத்தில் உள்ள கூட்ட அரங்கில் நேற்று (24.11.2023) காலை 10.30 மணியளவில் கழக மாணவர் அணி துணைச் செயலாளர் அதலை பி. செந்தில்குமார், வரவேற்புரை வழங்கினார். பேராசிரியர் சுப.வீ. பங்கேற்று சிறப்பித்தார்.

நிகழ்ச்சிக்கு, வருகைத் தந்த அனைவரையும் கழக மாணவர் அணிச் செயலாளர் சி.வி.எம்.பி. எழிலரசன், எம்.எல்.ஏ., தலைமை ஏற்று பயிலரங்கத்தின் நோக்கத்தை விளக்கி எடுத்துரைத்தார்.

நிகழ்ச்சிக்கு, கழக மாணவர் அணியின் மாநில நிர்வாகிகள் இரா. ராஜீவ்காந்தி, சி.ஜெரால்டு, எஸ். மோகன், மன்னை த. சோழராஜன், சேலம் ரா. தமிழரசன், பி. எம்.ஆனந்த், கா.பொன்ராஜ், பூர்ண சங்கீதா ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

நிகழ்ச்சியில், கழக மாணவர் அணி துணைச் செயலாளர் வி.ஜி. கோகுல் நன்றியுரை வழங்கினார்.

கருத்தியல் பயிலரங்கத்தின் முதல் அமர்வில் மன்னை த. சோழராஜன் நெறியாளராக நிகழ்வினை தொகுத்து வழங்க, “திராவிட இயக்கமும், மொழிப் போரும்” எனும் தலைப்பில் கழகத் தேர்தல் பணிக்குழுச் செயலாளர் கம்பம் பெ. செல்வேந்திரன் வகுப்பு எடுத்தார்.

இரண்டாம் அமர்வில் கா. அமுதரசன் நெறியாளராக நிகழ்வினை தொகுத்து வழங்க, “பாலினச் சமத்துவம்” எனும் தலைப்பில் தோழர் மதிவதனி வகுப்பு எடுத்தார்.

மூன்றாம் அமர்வில் ஜெ. வீரமணி நெறியாளராக நிகழ்வினை தொகுத்து வழங்க, “திராவிட இயக்கமும் ஊடகவியலும்” எனும் தலைப்பில் தோழர் செந்தில் வேல் வகுப்பு எடுத்தார்.

பயிலரங்கத்தில் மதுரை வடக்கு, மதுரை மாநகர், மதுரை தெற்கு, தேனி வடக்கு, தேனி தெற்கு, தெற்கு, விருதுநகர் வடக்கு, விருதுநகர் தெற்கு, இராமநாதபுரம், தூத்துக்குடி வடக்கு, தூத்துக்குடி தெற்கு, திருநெல்வேலி கிழக்கு, திருநெல்வேலி மத்திய, தென்காசி வடக்கு, தென்காசி தெற்கு, கன்னியாகுமரி கிழக்கு, கன்னியாகுமரி மேற்கு, விழுப்புரம் வடக்கு ஆகிய 17 மாவட்டங்களின் அமைப்பாளர் மற்றும் துணை அமைப்பாளர்கள் பங்கேற்றனர்.



ஒன்றிய முன்னாள் அமைச்சர் முரசொலி மாறன் அவர்களின் நினைவு தினத்தை முன்னிட்டு நெல்லை மத்திய மாவட்ட தி.மு.க. சார்பில் மாவட்டக் கழக அலுவலகத்தில் முரசொலி மாறன் அவர்களின் திருஉருவப்படத்திற்கு நெல்லை மத்திய மாவட்டப் பொறுப்பாளர் டி.பி.எம். மைதீன்கான் தலைமையில் மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்தப்பட்டது. நிகழ்வில் மாநில வர்த்தக அணி செயலாளர் மாலைராஜா, மாநில மகளிர் தொண்டரணி துணைச் செயலாளர் விஜிலா சத்யானந்த், மாவட்ட துணை செயலாளர்கள் தர்மன்,கிரிஜா குமார்,மேயர் சரவணன்,தீர்மானக் குழு உறுப்பினர் சுப.சீதாராமன், அருண்குமார்,கருணாகரன், மீரான் மைதீன்,பொன்னையா பாண்டியன்,அனிதா,தேவிகா, ஜோதி,பிரியா,ஜெனி,செந்தில், முருகன்,மாலதி,செல்லத்துரை, பிரான்சிஸ்,நெல்லை ரவி, ஸ்டீபன்,நவநீதன்,பலராமன், வீரபாண்டியன்,கலையரசன், இசக்கி பாண்டியன்,ஜலீஸ் ரகுமான்,சரத் மணி, சங்கரலிங்கம்,ரகுமான் ஷா, பாலன்,சண்முகசுந்தரம்,கவிஞர் மூர்த்தி,அலெக்சாண்டர் பிரிட்டோ,காதர்ஒலி,மைதீன் உட்பட கழகத்தினர் திரளாக கலந்து கொண்டனர்.

---

### சேலம் இளைஞர் அணி 2 வது மாநில மாநாடு இருசக்கர வாகனப் பிரச்சாரம்!

# கடலூர் கிழக்கு மாவட்டக் கழகத்தினர் பெருந்திரளாகப் பங்கேற்பு!

## மாவட்டச் செயலாளர் - அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் அறிவிப்பு!



தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு சிறப்பு செயலாக்க திட்டத்துறை அமைச்சர், கழக இளைஞரணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் அறிவிப்பின்படி வருகின்ற 17.12.2023 அன்று சேலத்தில் நடைபெறும் திமுக இளைஞர் அணி 2வது மாநில மாநாட்டிற்கு, அழைப்பு விடுத்து கலைஞர் மண்டலம் சார்பாக இருசக்கர வாகனப் பிரச்சார பேரணி, கடலூர் கிழக்கு மாவட்டம் சிதம்பரம், புவனகிரி, காட்டுமன்னார்கோவில் தொகுதிகளுக்குட்பட்ட பகுதிகளைத் தொடர்ந்து, கீழ்க்கண்ட பகுதிகளுக்கு, இன்று (25.11.2023 - சனிக்கிழமை) குறிஞ்சிப்பாடி, கடலூர் தொகுதிக்குட்பட்ட கீழ்க்கண்ட பகுதிகளுக்கும் இருசக்கர வாகனப் பிரச்சாரப் பேரணி. கீழ்க்கண்ட நிகழ்ச்சி நிரல்படி வருகைதர உள்ளது. அதுசமயம் இந்நிகழ்ச்சிகளை சம்பந்தப்பட்ட மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் கழக செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள், இளைஞரணி அமைப்பாளர் மற்றும் துணை அமைப்பாளர்கள் சிறப்பாக ஏற்பாடு செய்திடவும்.

மேலும் இந்நிகழ்ச்சிகளில் கடலூர் கிழக்கு மாவட்டத்தைச் சேர்ந்த, மாநில, மாவட்டக் கழக நிர்வாகிகள், மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர், வட்டம், வார்டு கிளைக் கழக செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள், தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், முன்னாள், இந்நாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், முன்னாள், இந்நாள் உள்ளாட்சி பிரதிநிதிகள், மாநகர மேயர், நகராட்சி, பேரூராட்சி, ஊராட்சிமன்ற தலைவர்கள், துணைத்தலைவர்கள், மாவட்ட ஊராட்சிக்குழு, ஒன்றியக்குழு உறுப்பினர்கள் மற்றும் மாநகராட்சி, நகராட்சி, பேரூராட்சி மன்ற உறுப்பினர்கள் இளைஞரணி மற்றும் கழக சார்பு அணிகளின் நிர்வாகிகள், கழகத் தோழர்கள், இளைஞர்கள், பொதுமக்கள் அனைவரும் பெருந்திரளாகக் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

**கடலூர் கிழக்கு மாவட்டத்தில் இருசக்கர வாகன பேரணி விபரம்**

**25.11.2023 (சனிக்கிழமை)**

| நேரம் | வழி | நிகழ்ச்சி நடைபெறும் இடம் | நிகழ்ச்சியில் கலந்துக்கொள்ளும் மாநகரம்/ஒன்றியம்/நகரம்/பேரூர் |
|---|---|---|---|
| காலை 9.00 மணி | நெய்வேலி ஆர்ச் கேட் வடக்குத்து வழியாக | கடலூர் கிழக்கு மாவட்ட திமுக சார்பில் வரவேற்பு வடக்குத்து கன்னியாக்கோவில் பாலம் | குறிஞ்சிப்பாடி தெற்கு ஒன்றியம் குறிஞ்சிப்பாடி வடக்கு ஒன்றியம் வடலூர் நகரம் குறிஞ்சிப்பாடி பேரூர் |
| காலை 9.15 மணி | கும்பகோணம் சாலை வழியாக | வடலூர் நான்கு முனை சந்திப்பு | குறிஞ்சிப்பாடி தெற்கு ஒன்றியம் வடலூர் நகரம் |
| காலை 9.30 மணி | ரோட்டு ஆண்டிக்குப்பம், யூனியன் ஆபிஸ் வழியாக | குறிஞ்சிப்பாடி பேருந்து நிலையம் | குறிஞ்சிப்பாடி தெற்கு ஒன்றியம் குறிஞ்சிப்பாடி பேரூர் |
| காலை 10.00 மணி | பெத்தநாயக்கன் குப்பம் தம்பிப்பேட்டை தோப்புக்கொல்லை வழியாக | குள்ளஞ்சாவடி அண்ணா சிலை அருகில் | குறிஞ்சிப்பாடி தெற்கு ஒன்றியம் குறிஞ்சிப்பாடி வடக்கு ஒன்றியம் |
| காலை 10.30 மணி | சுப்பிரமணியபுரம் சேடப்பாளையம் அன்னவல்லி கண்ணாரப்பேட்டை வழியாக | பச்சாங்குப்பம் இரட்டை ரோடு அருகில் | கடலூர் கிழக்கு ஒன்றியம் கடலூர் மேற்கு ஒன்றியம் |
| காலை 11.00 மணி | பச்சையாங்குப்பம் ஹவுசிங் போர்டு கடலூர் துறைமுகம் சாலைக்கரை வழியாக | ஹவுசிங் போர்டு வழியாக கடலூர் துறைமுகம் மணிக்கூண்டு அருகில் | கடலூர் மாநகரம், கடலூர் துறைமுகம் பகுதி |
| காலை 11.15 மணி | கடலூர் துறைமுகம் சாலைக்கரை வழியாக | கடலூர் சீமாட்டி அருகில் | கடலூர் மாநகரம் திருப்பாதிரிப்புலியூர் பகுதி |
| காலை 11.30 மணி | அண்ணா பாலம் வழியாக | கடலூர் மஞ்சக்குப்பம் தலைமை அஞ்சல் நிலையம் அருகில் | கடலூர் மாநகரம் மஞ்சக்குப்பம் பகுதி புதுப்பாளையம் பகுதி |
| காலை 11.45 மணி | மாவட்ட மருத்துவனை சாலை வழியாக | கடலூர் செம்மண்டலம் ஜங்ஷன் அருகில் | கடலூர் மாநகரம் மஞ்சக்குப்பம் பகுதி |
| மதியம் 12.00 மணி | நெல்லிக்குப்பம் சாலை வழியாக | கோண்டூர் வி.கே.ஹோட்டல் அருகில் வரக்கால்பட்டு வழியாக. | கடலூர் வடக்கு ஒன்றியம் கடலூர் தெற்கு ஒன்றியம் |

**அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம்,**
செயலாளர்
கடலூர் கிழக்கு மாவட்ட தி.மு.க.